**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

முன்னிலை–திரு.R.கோகுல் முருகன்,பி.ஏ.,பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம், ஆடி மாதம் 17–ஆம் நாள்

**அசல் வழக்கு எண். 895/2017**

( CNR.NO.TNKR-001976-2017 )

V.பாலகிருஷ்ணன் ...வாதி

**//எதிர்//**

G.கோபால்சாமி ...பிரதிவாதி

இந்த வழக்கு இன்று 02.08.2022 இறுதியாக என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.ரவிக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.N.மணிராஜ் அவர்கள் ஆஜராகியும் பின்னிட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா கடன் தொகையான ரூ.8,29,500/–ஐ பிரதிவாதி பின்வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்றும், தாவா செலவு தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2) அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்**

பிரதிவாதி வாதியிடம் அவருடைய அவசர நிமித்தம், குடும்ப செலவு மற்றும் வியாபார செலவிற்காகவும் கடந்த 24.02.2016 ம் தேதி கடன் கேட்டு ரூ.7,00,000/–ம் கடனாக பெற்றுக்கொண்டார் என்றும், பிரதிவாதி வாங்கிய கடனுக்கு கடனுறுதி சீட்டு ஒன்றை எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி கடன் தொகைக்கு நாள் ஒன்றுக்கு 100/–க்கு 5 பைசா வட்டி வீதம் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாகவும்,

பிரதிவாதி கடனை திருப்பி கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகவும், வாதி பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் திருப்பி கொடுக்கவில்லை என்றும், வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், அந்த அறிவிப்பிற்கு பின்னிட்டும் பிரதிவாதி எவ்வித தொகையும் கொடுக்க முன்வரவில்லை எனவும், எனவே, பிரதிவாதி வாதிக்கு வட்டி, அசல் சேர்த்து ரூ.8,29,500/– மற்றும் பின்வட்டி, செலவுத் தொகை தர உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி வழக்குரை தாக்கல் செய்தவுடன் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதி ஒருதலைபட்சபடுத்தப்பட்டு அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டது. கடந்த 13.04.2022 அன்று வாதி முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் ஒன்றை தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. இத்தோடு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

4) தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**5)பிரச்சனைக்கு தீர்வு**

பிரதிவாதி வாதியிடம் அவசர குடும்ப செலவுக்காகவும், வியாபார செலவிற்காகவும் ரூ.7,00,000/– கடனாக பெற்றுக்கொண்டு பிரதிவாதி பின்வட்டி மற்றும் செலவு தொகையுடன் வாதிக்கு திருப்பி செலுத்த உத்திரவிடக்கோரி வாதியால் இப்பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டார். வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.1 ன் மூலமாக வா.சா.ஆ.1 ஆக கடந்த 24.02.2016 அன்று பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு அசல், வா.சா.ஆ.2 ஆக கடந்த 22.11.2017 அன்று பிரதிவாதிக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல், வா.சா.ஆ.3 ஆக 24.11.2017 அன்று பிரதிவாதி மேற்படி

அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் போன்ற ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வாதி தரப்பு சாட்சியத்தையும், வாதியின் ஆவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும்போது, பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.7,00,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு வாதியின் பெயருக்கு ஒரு புரோநோட்டு ஒன்று எழுதி கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி கடன் தொகையை பிரதிவாதி வாதிக்கு முழுமையாக திருப்பி கொடுக்கவில்லை என்பதும் மேற்காண் அறிந்தமைகளில் இருந்து இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. ஆனால், பிரதிவாதி தரப்பில் வாதி வழக்கை மறுத்தலிக்கும் வகையில் எந்தவிதமான ஆவணமும் ஆஜர் செய்யாமல் அவர் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டு உள்ளார். எனவே, வாதிக்கு பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்பது மேற்காண் ஒட்டுமொத்த அறிந்தமைகளின் விளைவிற்கு இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. ஆகவே, வாதி அவருடைய வழக்கை நிரூபித்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாததால் நிலுவை கடன் தொகை ரூ.8,29,500/−ஐ செலுத்த கடப்பாடு உடையவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

6) ஆகவே, இறுதியாக பிரதிவாதி வாதிக்கு ரூ.8,29,500/−ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகையில் அசல் தொகை ரூ.7,00,000/−க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும் என்று தாவா செலவு தொகையுடன் வாதியின் தாவாவை அனுமதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்பானது, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 02 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R GOKUL MURUGAN

Digitally signed by R GOKUL MURUGAN
Date: 2022.08.02 18:40:05 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**

**<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | V.பாலகிருஷ்ணன் |

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 24.02.2016 | பிரதிவாதி வாதிக்கு எழுதிக் கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் |
| வா.சா.ஆ.2 | 22.11.2017 | வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.3 | 24.11.2017 | மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.</u>**

R GOKUL MURUGAN
Digitally signed by R GOKUL MURUGAN
Date: 2022.08.02 18:40:12 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**